தமிழ்நாடு அரசு
2025

கையெழுத்துத் தொடர்

**நிதி (படிகள்) துறை**

**அரசாணை (நிலை) எண்.98, நாள்: 28-04-2025.**

*(சித்திரை-15, திருவள்ளுவர் ஆண்டு 2056)*

**<u>சுருக்கம்</u>**

**படிகள்** – 01-01-2025 முதல் 2016-ஆம் ஆண்டிற்கு முந்தைய ஊதிய விகிதத்தில் ஊதியம் பெறும் அலுவலர்களுக்கான அகவிலைப்படி வீதம் – ஆணைகள் – வெளியிடப்படுகின்றன.

---

**பின்வருவனவற்றைப் படிக்கவும்:-**

அரசாணை (நிலை) எண்.351, நிதி (படிகள்)த் துறை, நாள். 19-11-2024.

-oOo-

**<u>ஆணை:</u>**

மேலே படிக்கப்பட்டுள்ள அரசாணையில் 2016-ஆம் ஆண்டிற்கு முந்தைய ஊதிய விகிதத்தில் தொடர்ந்து ஊதியம் பெறும் அலுவலர்களுக்கான அகவிலைப்படி வீதம் கீழ்க்கண்டவாறு அனுமதித்து ஆணை வெளியிடப்பட்டுள்ளது:-

| **2016-ஆம் ஆண்டிற்கு முந்தைய ஊதிய விகிதம்/தர ஊதியம்** | |
|---|---|
| **எந்நாளிலிருந்து வழங்கத்தக்கது** | **திருத்தியமைக்கப்பட்ட அகவிலைப்படி வீதம்** [மாதம் ஒன்றுக்கு] |
| [1] | [2] |
| 01-07-2024 | அடிப்படை ஊதியம் மற்றும் தர ஊதியத்தில் **246** சதவீதம் |

2. 2016-ஆம் ஆண்டிற்கு முந்தைய ஊதிய விகிதத்தில் தொடர்ந்து ஊதியம் பெறும் மாநில அரசு அலுவலர்களுக்கு தற்போது கீழே குறிப்பிட்டுள்ளபடி உயர்த்தப்பட்ட வீதத்தில் அகவிலைப்படி அனுமதித்து அரசு ஆணையிடுகிறது:-

| **2016-ஆம் ஆண்டிற்கு முந்தைய ஊதிய விகிதம்/தர ஊதியம்** | |
|---|---|
| **எந்நாளிலிருந்து வழங்கத்தக்கது** | **திருத்தியமைக்கப்பட்ட அகவிலைப்படி வீதம்** [மாதம் ஒன்றுக்கு] |
| [1] | [2] |
| 01-01-2025 | அடிப்படை ஊதியம் மற்றும் தர ஊதியத்தில் **252** சதவீதம் |

3. ஜனவரி 2025 முதல் ஏப்ரல் 2025 வரையிலான அகவிலைப்படி நிலுவைத் தொகையினை தற்போது நடைமுறையில் உள்ள பணமில்லாப் பரிவர்த்தனை முறை மின்னணு தீர்வு சேவை மூலம் வழங்கப்படவேண்டும். திருத்தப்பட்ட அகவிலைப்படியினைக் கணக்கிடுகையில் ஒரு ரூபாய்க்குக்

த.பி.பா.

குறைவாக வரக்கூடிய தொகை, அது 50 காசும் அதற்கு மேலும் இருக்குமாயின் அது அடுத்த ஒரு ரூபாயாகக் கணக்கிடப்பட வேண்டும். அதுவே, 50 காசுக்குக் குறைவாக இருந்தால் அது விட்டுவிடப்பட வேண்டும்.

4. இச்செலவு, சம்பந்தப்பட்ட கணக்குத் தலைப்பின் பெருந்தலைப்பு, துணைப் பெருந்தலைப்பு, சிறு தலைப்பின் கீழ்வரும் "303. அகவிலைப்படி" என்ற நுணுக்கத் தலைப்பில் பற்று வைக்கப்பட வேண்டும்.

5. இதற்கான பட்டியல்கள் சரியாக இருக்கும்பட்சத்தில் திருத்தப்பட்ட அகவிலைப்படியை வழங்குமாறு கருவூல அலுவலர்கள் / சம்பளக் கணக்கு அலுவலர்கள் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

**(ஆளுநரின் ஆணைப்படி)**

**த. உதயச்சந்திரன்**
**அரசு முதன்மைச் செயலாளர்**

**பெறுநர்**

அனைத்துத் துறை அரசுக் கூடுதல் தலைமைச் செயலாளர்/ முதன்மைச் செயலாளர்/ செயலாளர், சென்னை– 9

முதன்மைச் செயலாளர், சட்டமன்றப் பேரவைச் செயலகம், சென்னை–9.

காப்பாளர், ஆளுநர் மாளிகை, ராஜ்பவன், சென்னை–22.

ஆளுநரின் கூடுதல் தலைமைச் செயலாளர், ராஜ்பவன், சென்னை–22.

ஆளுநர் செயலகம், ராஜ்பவன், சென்னை–22.

தலைமை தணிக்கை இயக்குநர் (மு.கூ.பொ), பேராசியர் க.அன்பழகன் மாளிகை, சென்னை–35.

அனைத்து துறைத் தலைவர்கள்.

அனைத்துச் செயலகத் துறைகள் (அலுவலக நடைமுறை மற்றும் பட்டியல் பிரிவுகள்).

மாநில தகவல் ஆணையம், தேனாம்பேட்டை, சென்னை–18.

அனைத்து மாவட்ட ஆட்சியர்கள்.

அனைத்து மாவட்ட நீதிபதிகள் /அனைத்து முதன்மை நீதித்துறை மாஜிஸ்டிரேட்கள்.

முதன்மை மாநிலக் கணக்குத் துறைத் தலைவர் (கணக்குகள் மற்றும் உரிமைத் தொகை), சென்னை–18.

மாநிலக் கணக்குத் துறைத் தலைவர் (தணிக்கை–I), சென்னை–18.

மாநிலக் கணக்குத் துறைத் தலைவர் (தணிக்கை–II), சென்னை–18.

மாநிலக் கணக்குத் துறைத் தலைவர் (உதபி), சென்னை–9 / மதுரை.

இயக்குநர், கருவூலக் கணக்குத் துறை, சென்னை–35.

அனைத்து சம்பளக் கணக்கு அலுவலர்கள்.

அனைத்து கருவூல அலுவலர்கள்/அனைத்து சார் கருவூல அலுவலர்கள்.

தலைவர், தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம், சென்னை–3.

ஆணையாளர், ஒழுங்கு நடவடிக்கைகள் தீர்ப்பாயம், சென்னை–108.

பதிவாளர், உயர்நீதி மன்றம், சென்னை–104.

அனைத்து அரசுப் பல்கலைக் கழகங்கள் மற்றும் கோயம்புத்தூர் வேளாண்மைப் பல்கலைக் கழகம் ஆகியவற்றின் பதிவாளர்கள்.

அரசுக்கு சொந்தமான அனைத்து நிறுவனங்கள் / சட்டப்படியான வாரியங்கள்.

ஆணையாளர், பெருநகர சென்னை மாநகராட்சி, சென்னை–3.

அனைத்து மாநகராட்சி ஆணையாளர்கள், மதுரை / கோயம்புத்தூர் / திருச்சிராப்பள்ளி / சேலம் / திருநெல்வேலி / ஈரோடு / திருப்பூர் / தூத்துக்குடி

/ வேலூர் / தஞ்சாவூர் / கும்பகோணம் / திண்டுக்கல் / நாகர்கோயில் / ஓசூர் / ஆவடி / காஞ்சிபுரம் / கரூர் / கடலூர் / சிவகாசி / தாம்பரம்/ காரைக்குடி / நாமக்கல் / புதுக்கோட்டை / திருவண்ணாமலை மாநகராட்சி.

ஊரக வளர்ச்சித் துறை, அனைத்து உதவி இயக்குநர்கள் / அனைத்து வட்டார வளர்ச்சி அலுவலர்கள்.

அனைத்து நகராட்சி ஆணையாளர்கள் / அனைத்து கோட்டாட்சியர்கள்.

அனைத்து வட்டாட்சியர்கள்.

அனைத்து முதன்மை கல்வி அலுவலர்கள்.

இயக்குநர், தமிழ்நாடு ஒருங்கிணைந்த குழந்தைகள் மேம்பாட்டு சேவைகள், தரமணி, சென்னை-113.

**நகல் பெறுநர்**

மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் முதன்மைச் செயலாளர் – I, சென்னை-9.

மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் செயலாளர் – (II & III ), சென்னை-9.

மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்களின் கூடுதல் தலைமைச் செயலாளர், சென்னை-9.

மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் இணைச் செயலாளர், சென்னை-9

மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் சிறப்பு நேர்முக உதவியாளர், சென்னை-9.

அரசு தலைமைச் செயலாளரின் முதுநிலை முதன்மை தனிச் செயலர், சென்னை-9.

அரசு முதன்மைச் செயலாளரின் முதுநிலை முதன்மை தனிச் செயலர், நிதித்துறை, சென்னை-9.

இருப்புக்கோப்பு / உபரி நகல்கள்.

**-/ ஆணைப்படி : அனுப்பப்படுகிறது /-**

ஒ. நித்யா 28/4/2025

**பிரிவு அலுவலர்**

28/4/25